**D E P O S I T I O N O F W I T N E S S**

**--------**

**IN THE COURT OF SUBORDINATE JUDGE, GOBICHETTIPALAYAM**

**OS.219/2018**

Deposition of witness for

| | | | |
|---|---|---|---|
| Name: | **செல்லமுத்து** | Taluk | |
| Husband's / Father's Name: | | Calling: | |
| Village: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**08.10.2025.**

**பி.வா.சா. 2: செல்லமுத்து**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் மேட்டுவலவில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியமளிக்க எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைத்ததா என்றால் இல்லை. 1ஆம் பிரதிவாதி அழைத்ததன் அடிப்படையில் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதி கேசவி எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன் மகள் ஆவார். இந்த வழக்கு என்ன பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், கேசவியின் 20 பவுண் நகையை திலகவதிக்கு கொடுத்ததற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கு யாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும், திலகவதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திலகவதி என்ன பரிகாரம்கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் பொன்னுசாமி என்றால் சரிதான். பொன்னுசாமி என்னுடன் பிறந்த சகோதரரா என்றால் இல்லை, என்னுடைய சித்தப்பா மகன் ஆவார். பொன்னுசாமி இறப்பதற்கு முன்பாக எங்கு குடியிருந்தார் என்றால் நான் வசிக்கும் வீட்டிற்கு அருகில் குடியிருந்தார். பொன்னுசாமியால் கேசவி பெயரில் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பொன்னுசாமியால் திலகவதி பெயரில் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்ட விவரம் தெரியுமா

என்றால் தெரியாது. திலகவதி காதல் திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். திலகவதியின் காதல் திருமணத்தை அவரது பெற்றோர்கள் அங்கீகரித்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. திலகவதிக்கு எங்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர் பொன்னுசாமியும், திலகவதியும் என்றால் சாட்சியால் மேற்படி புகைப்படத்தை பார்வையிட்டு அதில் பொன்னுசாமியும் திலகவதியும் இருப்பதாக கூறுகிறார். மேற்படி புகைப்படம் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (பிரதிவாதி தரப்பில் மேற்படி புகைப்படத்திற்கான CD அல்லது Negative தாக்கல் செய்யப்படவில்லை என ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது.). திலகவதியின் திருமணத்தின்போது கேசவியும் சென்றிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர் 1ஆம் பிரதிவாதி கேசவியும், திலகவதியும் உள்ளார்களா என்றால் சாட்சியால் மேற்படி புகைப்படத்தை பார்வையிட்டு அது பற்றி தனக்கு தெரியாது என்று கூறுகிறார். வாதி திலகவதியின் திருமணத்தை வாதியின் தகப்பனார்தான் முன்னின்று நடத்தி வைத்தார் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய சாட்சியத்தில் 20 பவுன் நகையை கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றாலும், மேற்படி நகை எதற்காக கொடுக்கப்பட்டது என்றால் மேற்படி நகை திலகவதியின் மகள் திருமணத்திற்காக கொடுக்கப்பட்டது. நகை கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நகை கொடுத்தபோது நான் உடன் இருந்தேன். 1ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் நான் சாட்சியத்தில் கூறியுள்ளதுபோல் நகை கொடுக்கப்பட்டபோது நானும் உடன் இருந்ததாக கூறிவில்லை என்றாலும் நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியத்தில் பைசல் பேசப்பட்டதாக கூறியுள்ளேன் என்றாலும், எங்கு பைசல் பேசப்பட்டது என்றால் பள்ளக்காட்டில் பேசப்பட்டது. நான் சொல்வதுபோல் பைசல் எதுவும் செய்யப்படவில்லை என்றாலும், நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும், முதன்மை சாட்சியம் மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் பைசல் பேசப்பட்டபோது நானும் உடன் இருந்ததாக எதுவும் கூறவில்லை என்றாலும் நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன்

**என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted / read over to the witness and admitted by the deponent to be correct"

Subordinate Judge,
Gobichettipalayam.

**D E P O S I T I O N O F W I T N E S S**

**--------**

## IN THE COURT OF SUBORDINATE JUDGE, GOBICHETTIPALAYAM

**OS. /**

Deposition of witness for

| | | | |
|---|---|---|---|
| Name: | | Taluk | |
| Husband's / Father's Name: | | Calling: | |
| Village: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**08.10.2025.**

**பி.வா.சா. :**

**முதல் விசாரணை:**

**நான் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவேன், நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். பிரமாண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள கேட்கிறேன். வாதியின் வழக்கினை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

**குறுக்கு விசாரணை**–இல்லை.

வாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

"Taken down by me/before me in open Court, interpreted / read over to the witness and admitted by the deponent to be correct"

Subordinate Judge,
Gobichettipalayam.

**D E P O S I T I O N   O F   W I T N E S S**

**--------**

**IN THE COURT OF SUBORDINATE JUDGE, GOBICHETTIPALAYAM**

**IA. No.     in O.S.**

Deposition of witness for

| | | | |
|---|---|---|---|
| Name: | | Taluk | |
| Husband's / Father's Name: | | Calling: | |
| Village: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**08.10.2025.**

**ம.சா.1**

**முதல் விசாரணை:**

நான் மனுவில் மனுதாரர், நான் அசல் வழக்கில் 1ம் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். பிரமாண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள கேட்கிறேன்.

குறுக்கு விசாரணை இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted / read over to the witness and admitted by the deponent to be correct"

Subordinate Judge,
Gobichettipalayam.

**D E P O S I T I O N O F W I T N E S S**

**--------**

**IN THE COURT OF SUBORDINATE JUDGE, GOBICHETTIPALAYAM**

**REA. /2025 in REP**
**in OS. /**

Deposition of witness for

| | | | |
|---|---|---|---|
| Name: | | Taluk | |
| Husband's / Father's Name: | | Calling: | |
| Village: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**08.10.2025.**

**ம.சா.1**

**முதல் விசாரணை:**

நான் மனுவில் மனுதாரர், என்னுடைய ஆதார் அட்டையின் ஒப்பு நோக்கப்பட்ட நகல் ம.த.சா.1 ஆகவும், என்னுடைய வங்கி கணக்கின் ஒப்புநோக்கப்பட்ட நகல் ம.த.சா.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.